ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2497/59 - 2026 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2026.07.17

2497/ 59 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் அக்கரைப்பற்று மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டு விலகியமை காரணமாக அக்கரைப்பற்று மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் பிரதி மாநகர முதல்வர் பதவி வகித்த திரு. உதுமா லெப்பை உவைஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் பிரதி மாநகர முதல்வர் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக் கட்சியை சேர்ந்தவரும் அக்கரைப்பற்று. மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான பிரதி மாநகர முதல்வர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்:

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு திரு. முகம்மது அப்துல் காதர் அப்துல் ஹையு என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும்:

அக்கரைப்பற்று மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அத்தநாயக்க முதியன்சேலாகே கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. முகம்மது அப்துல் காதர் அப்துல் ஹையு என்பவர் அக்கரைப்பற்று மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
அக்கரைப்பற்று மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை.
2026, யூலை 17.

EOG 07- 0254

1A - PG 7812 — 04 (2026/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.